யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 07
## First Term Examination – 2020 – Grade 07

| புவியியல் | 61 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

புவியியல்

### பகுதி - I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. உயிரினங்களுக்கு சாதகமான சூழல் காணப்படுவதும் இயற்கையின் அற்புத உருவாக்கமாகவும் கருதப்படும் கோள் எது?
   1) புதன் 2) வெள்ளி 3) புவி 4) நெப்ரியூன்

2. புவியின் மத்திய கோட்டுச் சுற்றளவு யாது?
   1) 12757கி.மீ 2) 12714கி.மீ 3) 39943கி.மீ 4) 40077கி.மீ

3. பூகோளத்தில் வடக்குத் தெற்காக குத்தாக நீண்டு செல்லும் கோடுகளின் மொத்த எண்ணிக்கை யாது?
   1) 360 2) 361 3) 05 4) 181

4. புவியியல் ரீதியான புவிக்கோளத்தில் வடதுருவம் என அழைக்கப்படுவது எது?
   1) $0^0$ மத்திய அகலக்கோடு 2) $90^0$ வட அகலக்கோடு
   3) $66\frac{1}{2}^0$ வட அகலாங்கு 4) $90^0$ தென் அகலக்கோடு

5. பூகோளத்தின் தெற்கு அரைப்பகுதியில் அமைந்துள்ள கண்டம் எது?
   1) வடஅமெரிக்கா 2) அவுஸ்திரேலியா
   3) ஐரோப்பா 4) ஆசியா

6. பூகோளத்தில் $80^0$ கிழக்கு நெடுங்கோட்டில் அமைந்துள்ள ஒரு நகரமாக கருதப்படக்கூடியது?
   1) நியூயோர்க் 2) லண்டன்
   3) டோக்கியோ 4) கொழும்பு

7. பரப்பளவில் மிகப்பெரியதும் ,மிகச்சிறியதுமான கண்டங்களை முறையே குறிப்பது எது?
   1) ஆசியா,அவுஸ்திரேலியா 2) அவுஸ்திரேலியா, ஆசியா
   3) ஆசியா, ஐரோப்பா 4) ஆசியா,ஆபிரிக்கா

8. கண்டமாகவும் தனி நாடாகவும் கருதப்படக்கூடியது எது?
   1) ஆபிரிக்கா 2) ஆசியா 3) அவுஸ்திரேலியா 4)தென்அமெரிக்கா

9. மேற்கு நெடுங்கோடுகளை மாத்திரம் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ள கண்டம் எது?
   1) ஆசியா 2) ஆபிரிக்கா 3) ஐரோப்பா 4) தென்அமெரிக்கா



Education கல்வி அதியாபன
kalvi.lk

10. இந்து சமுத்திரத்தின் பரப்பளவினைக் குறிப்பது எது?
   1) 156மில்.சதுர.கி.மீ   2) 77 மில்.சதுர.கி.மீ
   3) 69 மில்.சதுர.கி.மீ   4) 20 மில்.சதுர.கி.மீ

11. பின்வருவனவற்றுள் இந்து சமுத்திரத்திற்கு வெளியில் அமைந்துள்ள தீவாக கருதப்படக்கூடியது எது?
   1)மடகஸ்கார்   2)சுமாத்திரா   3)கரீபியன்தீவு   4)இலங்கை

12. பின்வருவனவற்றுள் நிலத்தினால் சூழப்பட்ட கடலாக கருதப்பட முடியாதது எது?
   1)பால்டிக்கடல்   2)கருங்கடல்   3)கஸ்பியன்கடல்   4)ஏரல்கடல்

13. பின்வருவனவற்றுள் நீர்ப்பகுதியாக கருதப்படுவது எது?
   1)கண்டம்   2)சமுத்திரம்   3)தீபகற்கம்   4)தீவு

14. சமுத்திரங்களில் மிகவும் சிறியது எத?
   1)இந்து   2)அந்தாட்டிக்   3)அத்திலாந்திக்   4)ஆட்டிக்

15. இலங்கையின் நீளம் அளவிடப்படுவது?
   1)பருத்தித்துறை-தெய்வேந்திரமுனை   2) பருத்தித்துறை-கொழும்பு
   3) கொழும்பு- தெய்வேந்திரமுனை   4) கொழும்பு-சங்கமான்

16. இலங்கையின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள சமுத்திரப்பகுதி எது?
   1)இந்து   2) ஆட்டிக்   3) அத்திலாந்திக   4)பசுபிக்

17. ஒரு நாட்டினது ஆட்புல கடல் எல்லை என அழைக்கப்படுவது கரையோரத்திலிருந்து எவ்வளவு தூரத்தினையாகும்?
   1)12கி.மீ   2)12கடல்மைல்   3)510கி.மீ   4)16கடல்மைல்

18. இலங்கையின் உள்ளகச் சமவெளியில் அவதானிக்கப்படக்கூடிய பிரதான அம்சம் எது?
   1)குடா   2)குடாநாடு   3)எச்சக்குன்று   4)முனை

19. இலங்கையின் கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள கடனீரேரி எது?
   1)புத்தளம்   2)நீர்கொழும்பு   3)மட்டக்களப்பு   4)யாழ்ப்பாணக்கடனீரேரி

20. இலங்கையிலுள்ள இயற்கையாக உருவான ஒரு தேசிய மரபுரிமையாக கருதப்படுவது எது?
   1)ஸ்ரீமகாபோதி   2)நாமல்பூங்கா   3)சிகிரியா   4)ரண்மசுபூங்கா

(20 x 2 = 40 புள்ளிகள்)




kalvi.lk

## பகுதி-II

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1) தரப்பட்ட உலக தேசப்படத்தினைப் பயன்படுத்தி கீழ்தரப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்குக.





Education கல்வி අධ්‍යාපන

i. A,B,C,Dஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள கண்டங்களின் பெயர்களை முறையே தருக?

ii. E,F,G,H ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள சமுத்திரங்களின் பெயர்களை முறையே தருக?

iii. I,J,K,L ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள தீவுகளின் பெயர்களை முறையே தருக?

2)




i. வரைபில் A,B,C,D,E ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள அகலக்கோடுகளின் பெயர்களைத் தருக?

(5 புள்ளி)

ii. பின்வரும் அளவுகளினால் குறிப்பிடப்படும் நெடுங்கோடுகளின் பெயர்களைத் தருக?

A-$0^0$ -

B-$180^0$ -

(2புள்ளி)

iii. அகலக்கோடுகளினது பயன்பாடுகள் இரண்டினையும் நெடுங்கோடுகளினது பயன்பாடுகள் இரண்டினையும் தருக?

(5 புள்ளி)



kalvi.lk

3) i. புவிச்சுழற்சியையும் ,புவிச்சுற்றுகையையும் வேறுபடுத்துக? (4 புள்ளி)

ii. புவிச்சுற்றுகையின் விளைவுகளை சுருக்கமாக விளக்குக? (4 புள்ளி)

iii. புவியின் வடிவம் கோளமானது என்பதற்கு உம்மால் முன்வைக்கக்கூடிய நான்கு சான்றுகளைக் குறிப்பிடுக? (4 புள்ளி)

4) i. பின்வருவனவற்றை சுருக்கமாக விளக்குக?

A-கண்டம்

B-சமுத்திரம்

C-தீவு (2×3=6புள்ளி)

ii. நிலப்பகுதியில் அமைந்துள்ள எவையேனும் மூன்று கடல்களைத் தருக? (3புள்ளி)

iii. ஆசியாக்கண்டத்தில் அரசியல் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ள எவையேனும் மூன்று நாடுகளைத் தருக? (3புள்ளி)

5) i. இலங்கையின் தனி அமைவிடத்தினை குறிப்பிடும் அகல மற்றும் நெடுங்கோட்டு எல்லைகளைக் குறிப்பிடுக?

ii. இலங்கையின் அமைவிடம் காரணமாக காலநிலை ரீதியாக கொண்டுள்ள செல்வாக்குகளை விளக்குக?

iii. இலங்கையின் தேசிய மரபுரிமைகளாக கருதப்படும் பௌதீக ரீதியாக பார்க்க முடியாத மனித நடத்தையினால் வெளிப்படுத்தக் கூடிய மரபுரிமைகள் நான்கு தருக?

(4+4+4=12புள்ளி)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் O/L வரை**

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**